MCOP.No. 38 / 2018

Dated : 23.12.2021

Time: 1.20 p.m. To 1.37 p.m.

P.W. - 1 சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை

நான் பயணம் செய்த நெல் அறுக்கும் இயந்திரத்தில் டிரைவர் மட்டும்தான் பயணம் செய்ய அனுமதி உண்டு என்றால் எனக்கு தெரியாது. கூப்பிட்டார்கள் சென்றேன். நெல் அறுக்கும் இயந்திரத்தில் டிரைவர் மட்டும்தான் வண்டியில் செல்லமுடியும் என்று பதிவுச்சான்றிதழ் ம.சா.ஆ.11ல் உள்ளது என்றால் கூப்பிட்டதால் சென்றேன். பதிவுச்சான்றிதழில் உள்ள விவரம் 1,2 எதிர்மனுதாரர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். ம.சா.ஆ.12 ல் டிரைவருக்கு மட்டும்தான் பிரிமியம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வண்டியின் பதிவு சான்றிதழ் மற்றும் காப்பீட்டு பாலிசி, மோட்டார் வாகன சட்டப்படி நெல் அறுக்கும் இயந்திரத்தில் டிரைவர் மட்டும் தான் செல்ல அனுமதியுண்டு, வேறு நபர்கள் செல்லமுடியாது என்றால், உரிமையாளர் கிளினராக கூப்பிட்டதால் சென்றேன். டிரைவர் மட்டும் செல்லவேண்டிய வண்டியில் உரிமையாளர் அழைத்ததால் நான் கிளீனராக சென்றதால் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடு கொடுக்கக்கடமைப்பட்டதல்ல என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள்தான் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. வருமானத்தை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து இடது பக்க டயர் வெடித்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. டிரைவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் இடது பக்க டயர் வெடித்ததால் விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1,2 எதிர்மனுதாரர்கள் வாகனத்தை சரியாக பராமரிக்காததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. முறையாக வாகனம் பராமரிக்கப்பட்டிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 01.02.2017 ற்கு பிறகு தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகிவிட்டது என்றும், மனுவிற்காக பாதிப்பு ஏற்பட்டதாக கூறகிறேன் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள நஷ்டஈடு அதிகபடியானது என்றால் சரியல்ல. நான் பாலிசி நிபந்தனைகளையும், ஆர்சி நிபந்தனைகளையும் மீறியுள்ளதால் 1,2 எதிர்மனுதாரர்கள் தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றும், 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் நெல் அறுக்கும்

இயந்திரத்தில் பயணியாக பயணம் செய்துவிட்டு வழக்கிற்காக கிளினராக சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை- இல்லை.</u>

Sd/-Selvi.R.Dhanam,
Subordinate Judge,
Attur.